# தமிழ்த்துறை

# இளநிலைப் பட்டவகுப்பு

# பிறதுறை விருப்பப்பாடம்:

# தமிழ் இலக்கிய வரலாறு

**பாட ஆசிரியர்: மோ. செந்தில்குமார்**

## அலகு 4:

## பாடப்பகுதி

1. சமணம் வளர்த்த தமிழ்
2. பௌத்தம் வளர்த்த தமிழ்
3. சைவம் வளர்த்த தமிழ்
4. வைணவம் வளர்த்த தமிழ்

# 13

# சமணம் வளர்த்த தமிழ்

தமிழகத்தில் சமண சமயம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி.எட்டாம் நூற்றாண்டு வரையில் சிறந்து விளங்கியது. அச் சமயத்தைப் பின்பற்றியவர்கள் நாட்டில் சிறப்பும் செல்வாக்கும் முதன்மையும் பெற்றுத் திகழ்ந்தனர். தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்ப, தமிழை நல்ல கருவியாகக் கொண்டனர். புதுவகையான செய்யுட்களையும், புதுவகையான இலக்கியங்களையும் படைத்தனர். அறநூல்களையும் இயற்றினர். வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ் சிப்பா முதலிய நான்கு வகைப்பாக்களை மட்டும் கொண்டிருந்த தமிழ் மொழியில் துறை, தாழிசை, விருத்தம் என்ற பாவினங்கள் வளர்த்துப் பாடல்கள் இயற்றினர். இத்தகைய பெருந்தொண்டினால் தமிழ் இலக்கிய வரலாற்றில் சமணர்கள் சிறப்பிடம் பெறுகிறார்கள்.

## 1. இலக்கியங்கள்

சமணர்களால் இயற்றப்பெற்ற இலக்கியங்களுள் ஐம்பெருங் காப்பியங்களில் அடங்கிய சிலப்பதிகாரமும் சீவக சிந்தாமணியும் தலை சிறந்தன. சிலப்பதிகாரம் தமிழ்மொழியில் தோன்றிய முதல் காப்பிய மாகும். முத்தமிழும் விரவப் பெற்றுக் கற்போர் நெஞ்சை அள்ளும் இனிமைக் காவியமுமாகும். கற்பின் இலக்கணமாகத் திகழ் கண்ணகி, அவள் கணவன் கோவலன் ஆகிய குடிமக்களை இக்காப்பியம் கதைத் தலைவர்களாகக் கொண்டு விளங்குவதால் இதனைக் 'குடிமக்கள் காப்பியம்' என்று அழைப்பர். 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார மென்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு' என்று பாரதியார் இதைப் போற்றுகிறார். சீவகசிந்தாமணி, திருத்தக்கதேவரால் இயற்றப்பெற்றது. காவியப் பண்புகளெல்லாம் ஒருங்கே அமையப் பெற்று, பிற காவியங் களுக்கு வழிகாட்டியாக விளங்கிய பெருமை இந்நூலுக்கு உண்டு. ஐம்பெருங்காப்பியங்களின் வரிசையிலே இந்நூல் முதலாவதாக விளங்குவதாலும் பழைய தமிழ் நூல்களின் உரையாசிரியர்கள் பலர்

Scanned by CamScanner

இந்நூலிலிருந்து பாடல்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுவதாலும் இந்நூலின் சிறப்பை அறியலாம். இந்நூல் காலம் கடந்து என்றும் வாழும் ஆற்றல் பெற்றிருப்பது இந்நூலின் பெருமையை விளக்குவதாம். பிற சமயத்தினரும் இதை விரும்பிக் கற்கின்றனர். சைவராகக் கருதப்பெறும் நச்சினார்க்கினியர் இந்நூலுக்கு உரையெழுதியிருத்தல் இந்நூல் சமயங்கடந்த காவிய நயம் பெற்றிருப்பதற்குச் சான்றாகும். சமணர்கள் இயற்றிய ஏனைய இலக்கியங்கள் சூளாமணி, வளையாபதி, யசோதா காவியம், நீலகேசி, உதயணன் கதை, மேருமந்திர புராணம், திருக்கலம்பகம், திருநூற்று அந்தாதி ஆகியனவாம். இவற்றுள் சூளாமணி சிந்தாமணியைப் போன்று சிறப்புடையதாகும்.

### 2. நீதி நூல்கள்

நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, ஏலாதி ஆகிய நூல்கள் சமணர்களால் இயற்றப்பட்ட அறநூல்களாம். திருவள்ளுவரும் சமணரே என்பது அறிஞர் கருத்து. நாலடியார் திருக்குறள் போன்று சிறப்புடைய நூலாகும். 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழியில் நான்கு என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.

### 3. இலக்கண நூல்கள்

தமிழ் இலக்கண வளர்ச்சியில் சமணர்களுக்குப் பெரும்பங்கு உண்டு. தொல்காப்பியமே இன்று கிடைத்துள்ள முதல் தமிழ் இலக்கண நூலாகும். அந்நூலாசிரியரைச் சமணர் என்று கூறும் வழக்கம் உண்டு. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்ற யாப்பிலக்கண நூல் களும் அவற்றின் உரைநூல்களும் சமணர்களால் இயற்றப்பெற்றவை. செய்யுள் இலக்கணத்தை அறிய இவை உதவுகின்றன. நன்னூலுக்கு முன்பு நேமிநாதம் என்ற இலக்கண நூலையும் சமணர் இயற்றினர். தமிழில் சிறப்பாக விளங்கும் பொருளிலக்கணத்தைப் பற்றிய அகப் பொருள் விளக்கம் என்ற நூலும் சமணர்களால் இயற்றப்பட்டதே.

### 4. நிகண்டுகள்

சொற்களின் பொருள்களை அறியத் துணைபுரியும் நிகண்டுகளை முதன் முதலில் இயற்றிய பெருமை சமணர்களையே சாரும். தமிழில் சிறப்பாக வழங்கும் நிகண்டு சூடாமணி நிகண்டாகும். இதனை இயற்றியவர் மண்டல புருடர் என்ற சமண முனிவராவர். சமணரால் இயற்றப்பெற்ற பிற நிகண்டுகள் தமிழ் நிகண்டு, திவாகரம்,

Scanned by CamScanner

பிங்கலந்தை ஆகியன. திவாகரத்தை, திவாகரர் என்ற சமண முனிவரும், பிங்கலந்தையை அவருடைய மகன் பிங்கலரும் இயற்றினார்.

5. கேசி நூல்கள்

சமணர், பௌத்தர்களிடையே சமயப் பூசல்கள் ஏற்பட்டன. அதனால் அவர்கள் தம்முள் சொற்போர் புரிந்தனர். ஒருவரையொருவர் கண்டித்து நூல்கள் இயற்றினர். இதனால் தமிழில் பல நூல்கள் தோன்றின. சமண சமயத்தைக் கண்டித்து பௌத்தர்கள் குண்டலகேசி என்னும் நூலை இயற்றினர். குண்டலகேசிக்கு மாறாக பௌத்த சமயத்தைக் கண்டித்துச் சமணர்கள் நீலகேசி என்னும் நூலை இயற்றினர். இது ஐஞ் சிறு காப்பியங்களுள் ஒன்றாகும்.

6. பிற நூல்கள்

எலி விருத்தம், கிளி விருத்தம், சாந்தி புராணம், நாரதசரிதை, மல்லிநாதர் புராணம் ஆகிய நூல்களும் சமணர்கள் இயற்றியவை. சமண சமயத் தொடர்பான இராமாயணம் ஒன்றும் இருந்ததாகத் தெரிகிறது.

7. உரைநடை நூல்கள்

சமணர் இயற்றிய உரைநடை நூல்கள் ஸ்ரீபுராணமும், கத்தய சிந்தாமணியும் ஆகும்.

சமணர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதையே முதல் நோக்கமாகக் கொண்டிருந்தனர். இந்நாட்டில் தம் சமயத்தைப் பரப்ப மக்கள் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நூல் வகைகளை இயற்றி, நூல்களின் இடைஇடையே தம் சமயக் கருத்துக்களைப் பதித்தனர். இதனால் தமிழுக்குப் பெரு நன்மை விளைந்தது. உயர்ந்த காவியங்களும், சிறந்த இலக்கணங்களும், ஒப்பற்ற நீதி நூல்களும், நிகண்டுகளும் பிறவும் தோன்றின. சமணர்களின் இலக்கியப் பணியால் தமிழ் இலக்கியப் பரப்பு மேலும் விரிவடைந்தது.

Scanned by CamScanner

14

# பௌத்தம் வளர்த்த தமிழ்

பௌத்த சமயம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பேரரசன் அசோகன் காலத்தில் தமிழ்நாட்டில் பரவியது. கடைச்சங்க காலத்திற்குப் பிறகு களப்பிரர்கள், தமிழ்நாட்டை ஆண்டனர். இவர்கள் தமிழரல்லர். இவர்கள் பௌத்த சமயத்தைத் தழுவியவர்; பாலி மொழியை ஆதரித்தனர். எனவே பௌத்த சமயம் தமிழ் நாட்டில் வேரூன்றியது. சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. பௌத்தர்கள் தங்கள் சமயக் கொள்கை களைப் பரப்பத் தமிழைக் கற்றுத் தமிழில் பல நூல்கள் இயற்றினர். நூல்களில் தங்கள் சமயக் கொள்கைகளை வலியுறுத்தினர். தமிழர் களிலும் பலர் பௌத்த சமயத்தைத் தழுவினர். திந்நாகர், தர்மபாலர் போன்ற தமிழ் பௌத்தர்கள் வடநாட்டில் விளங்கிய நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், தலைவராகவும் விளங்கினர். இளம்போதியார் என்ற பௌத்த சமயப் புலவர் ஒருவரின் பாடல், கடைச் சங்க நூலான நற்றிணையில் (72ஆம்-பாடல்)காணப்படுகிறது. பௌத்த சமயம் தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுகள் நிலை பெற்றிருந்ததால் தமிழ் இலக்கியம் நல்ல ஆக்கம் பெற்றது. பௌத்தர்கள் சிறந்த இலக்கிய, இலக்கணங்களையும் காவியங்களையும் நிகண்டுகளையும் படைத்து உதவினர். தமிழில் புதுவகையான செய்யுட்களையும் இயற்றினர்.

1. **காப்பியம்**

பௌத்தர்கள் பௌத்த மதக் கருத்துக்களையும் பௌத்த மதக் கதைகளையும் அடிப்படையாகக் கொண்ட பல நூல்கள் இயற்றி யிருக்கவேண்டும். அவர்களின் வேதமாகிய திரிபிடகம் போன்ற நூல்களைத்தமிழில் மொழி பெயர்த்தும் இருக்க வேண்டும். ஆனால் அவை எல்லாம் இப்போது கிடைக்கவில்லை. பௌத்த சமயக் கொள்கைகளை விளக்கித் தமிழில் எழுந்த முதல் காப்பியமான மணிமேகலை ஒன்றுதான் இப்போது முழுநூலாகக் கிடைத்துள்ளது.

Scanned by CamScanner

இது ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகும். இதனை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனாராவர். இவர், இளங்கோவடிகளின் இனிய நண்பர். இக்காப்பியத்தையும் அடிகளாரின் சிலப்பதிகாரத்தையும் சேர்த்து "இரட்டைக்காப்பியங்கள்" என்று வழங்குவர் 'மணிமேகலை துறவு' என்றபெயரும் உண்டு. காவியத்தலைவியான மணிமேகலை துறவுபூண்டு தவவாழ்வில் ஈடுபட்டதைக் கதைப் பொருளாகக் கொண்டு, பௌத்த சமயக்கருத்துக்களை ஆங்காங்கே அறிவுறுத்திச் செல்கிறார் சாத்தனார். ஆசிரியரின் பௌத்தசமய உணர்ச்சி நூலில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது.

2. **விம்பசார கதை**

மகத தேசத்து மன்னன் விம்பசாரன் என்பவன் புத்தரின் அறிவுரையினால் பௌத்த சமயத்தைத் தழுவுகிறான். இவ்வரலாற்றைக் கூறுவதே இக்காவியம். இது ஆசிரியப்பாவில் இயன்றது. மணிமேகலையைப் போன்று இக்காப்பியமும் சிறப்போடு விளங்கியிருக்க வேண்டும். நூலின் பெயரைத் தவிர வேறு செய்திகளை அறிந்து கொள்ள இயலவில்லை.

3. **சித்தாந்தத் தொகை**

மறைந்து போன நூல்களுள் இதுவும் ஒன்று. பௌத்த சமயச் சித்தாந்தங்களை தொகுத்துக் கூறுவது. நீலகேசி உரையில் இருந்து ஒரு பாடல் கிடைத்துள்ளது.

4. **திருப்பதிகம்**

புத்தரைப்பற்றிய துதி நூல். பத்துப் பாடல் கொண்ட ஒரு சிறு நூல். சில பாடல்கள் கிடைத்துள்ளன.

5. **அபிதம்மாவதாரம்**

தம் மாணவி ஒருத்தியின் வேண்டுகோளின்படி புத்ததத்தர் இதனை இயற்றினார் என்பர்.

6. **குண்டலகேசி**

இக்காப்பியமும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். இதனை இயற்றியவர் நாதகுத்தனார். இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. சில செய்யுட்களே கிடைத்துள்ளன. பௌத்தருக்கும் சமணருக்கும் ஏற்பட்ட சமய வாதத்தினால் உண்டான நூல்களைக் கேசி நூல்கள் என்று வழங்குவர். சமண சமயத்தைக் கண்டித்து பௌத்தர் குண்டலகேசியை இயற்றினர்.

Scanned by CamScanner

## 7. இலக்கணம்

பௌத்தர்கள் இயற்றிய இலக்கணங்களுள் வீரசோழியம் என்ற நூலே இப்போது உள்ளது. இதனை இயற்றியவர் புத்தமித்திரனார். இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற தமிழிலக்கணம் ஐந்தையும் கூறுகிறது. இந்நூலில், வடமொழி இலக்கண விதிகளைத் தமிழிற்கும் பொருத்திக் கூறுகிறார் ஆசிரியர். இந்நூல் தமிழ் நாட்டில் பெரிதும் போற்றப்படவில்லை.

பௌத்தர்கள் தமிழ்மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் சிறந்த தொண்டு ஆற்றியுள்ளனர். ஆயினும் தமிழுக்கு வேண்டாத மணிப் பிரவாள நடை, கிரந்த எழுத்து முறை ஆகியவற்றையும் தோற்று வித்தனர். சில பிராகிருதச் சொற்கள் தமிழிற் கலந்தன என்றாலும், பௌத்தர்களின் தமிழ்த்தொண்டு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

Scanned by CamScanner

# 15

# சைவம் வளர்த்த தமிழ்

மதுரையிலே விளங்கிய கடைச்சங்கம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அழிவுற்றது. அதன்பின் முந்நூறு ஆண்டுகள் வரை தமிழகம் இருள்சூழ்ந்து கிடந்தது. வேற்றுப்புலத்திலிருந்து வந்த களப்பிரர்கள் தமிழ்நாட்டை அடிமைப்படுத்தி, தமிழ்க்கலை, நாகரிகம், மொழி ஆகியவற்றைச் சிதைத்து அழித்துவிட்டனர். பிராகிருதம் போன்ற மொழிக்கும், பௌத்த சமண சமயங்களுக்குமே அவர்கள் ஆக்கம் அளித்தனர். சமயக் கொடுமைகளினால் நலிவுற்ற தமிழ் மக்களுள் சிலர் இச்சமயங்களைத் தழுவினர். பின்னர் பல்லவர்களும், பாண்டியர்களும் இக்களப்பிரர்களை வென்று ஒடுக்கினர். அரசியலிலே ஒரு பெரும் மாறுதல் விளைந்தது. ஆயினும் மக்களின் தலைவர்களாக விளங்கிய சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களுமே மக்களின் உள்ளங்களில் மலர்ச்சியைத் தோற்றுவித்தனர். இப்பெரியார்கள் பண்ணோடு கலந்த தமிழ்ப் பாடல்களை இயற்றி மக்களின் உள்ளங்களிலே தமிழ் உணர்வை ஊட்டினர். இறைவனைப் பாடிப் பக்தி நெறியை வளர்த்தனர். இப்பாடல்களின் தொகுதியே பக்தி இலக்கியம். பக்தி இலக்கியத்தின் பயனாகத் தமிழ் இலக்கியம் புதுமையும், பொலிவும், இனிமையும், எளிமையும் பெற்றுத் திகழ்கிறது.

## 1. பக்தி இலக்கியம்

சைவசமய குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் பாடியருளிய தேவார, திருவாசகத்தையும், பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தையும் பக்தி இலக்கியம் எனக் கூறலாம். இப்பெரியார்கள் தமிழ்நாட்டில் உள்ள இறைவன் திருக்கோயில்களுக்கெல்லாம் சென்று இறைவனை இசைபாடித் தொழுதனர். சைவப் பெரியார்கள் பாடிய பாடல்களைப் பதிகம் என்றும் வைணவச் சான்றோர் பாடிய பாடல்களைப் பாசுரம் என்றும் வழங்குவர். அவ்விதம் கிடைத்த பாடல்களைப் பின்னாளில்

Scanned by CamScanner

ஒரு முறையாகத் தொகுத்தனர். நம்பியாண்டார் நம்பி என்ற சைவப் பெரியார் சிவனடியார்கள் பாடிய பாடல்களை எல்லாம் தொகுத்தார். அத்தொகுப்பு எட்டு பகுதிகளாக அமைந்தது. அவருக்குப் பின் எஞ்சிய நான்கு பகுதிகள் தொகுக்கப்பட்டன. ஒவ்வொரு பகுதியையும் திருமுறை என்று வழங்குவர். அதேபோல் திருமால் மீது பாடிய ஆழ்வார்களின் பாசுரங்களை எல்லாம் நாதமுனி என்ற வைணவப் பெரியார் தொகுத்து நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாக அமைத்தார்.

**பன்னிரு திருமுறைகள்**

**முதல் மூன்று திருமுறைகள்** – திருஞான சம்பந்தர் பாடிய பாடல்கள்

**நான்கு ஐந்து ஆறாம் திருமுறைகள்** – திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள்

**ஏழாம் திருமுறை** – சுந்தரர் பாடிய பாடல்கள்

**எட்டாம் திருமுறை** – மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும்

**ஒன்பதாம் திருமுறை** – திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருஷோத்த நம்பி முதலான ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும்.

**பத்தாம் திருமுறை** – திருமூலரின் திருமந்திரம்

**பதினோராம் திருமுறை** – காரைக்கால் அம்மையார், திருவாலவுடையார், கல்லாட தேவ நாயனார், நக்கீர தேவர், கபில தேவர், பரண தேவர், அதிராவடிகள், இளம் பெருமானடிகள், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி முதலான பன்னிருவர் பாடிய நாற்பது நூல்கள்.

**பன்னிரண்டாம் திருமுறை** – சேக்கிழாரின் பெரிய புராணம்

நாயன்மார் என்று சைவத்தில் சிறப்பித்துக் கூறப்படுபவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வராவர். எனவே இவர்கள் 'நாயன்மார் நால்வர்' என அழைக்கப் படுகின்றனர். இவர்கள் பாடிய பாடல்கள் 'நால்வர் தமிழ்' என்று கூறப்படுகின்றன. திருமூலரும், பதினோராம் திருமுறையைப் பாடியவர் களுள் ஒருவரான காரைக்கால் அம்மையாரும் இந்நால்வர்க்கும் முற்பட்டவர்கள். இவர்கள் அறுவரும் ஆற்றிய சைவத் தமிழ்ப் பணிகளைக் காணலாம்.

## திருஞானசம்பந்தர்

சீர்காழியில் அந்தணர் குலத்தில் சிவபாத இருதயர்க்கும் பகவதி அம்மையார்க்கும் மகனாகத் தோன்றினார். மூன்று வயதில் உமையம்மையாரின் ஞானப்பால் உண்டு இறைவன் மீது 'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் பாடலைப் பாடினார். அன்று முதல் பல்வேறு சிவத் தலங்களுக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது இசையுடன் கூடிய பாடல்களைப் பாடினார். இவருடைய பாடல்கள் பன்னிரு திருமுறையில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டன. இவர் பதினாறாயிரம் பதிகங்கள் பாடினார் என்று கூறுவர் ஆனால் இப்பொழுது கிடைத்திருப்பவை 384 பதிகங்கள் மட்டுமே. பதிகம் என்பது பத்து அல்லது பதினோரு பாடல்களைக் கொண்டதாகும்.

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று சுந்தரர் போற்றியுள்ளமை ஒன்றே இவரது பெருமைக்குப் போதிய சான்றாகும். ஆதிசங்கரர் இவரைத் 'திராவிட சிசு' என்று கூறியுள்ளார். இவர் இறைவன் மீது பதிகங்கள் பாடிச் செய்த அற்புதங்கள் மிகப் பலவாகும்.

பாண்டிய நாட்டை ஆண்டு வந்த கூன்பாண்டியன் சமண சமயம் சார்ந்திருந்தான். அவனுடைய மனைவியார் மங்கையர்க்கரசியார் தம் கணவன் வேற்றுச் சமயத்தைச் சார்ந்து சிந்தை திரிந்து அல்லலுறுவதைக் கண்டு அவர் வருந்தினார். அவனைச் சைவ சமயம் சேர்த்தற் பொருட்டுத் திருஞான சம்பந்தரை வேண்டினார். சம்பந்தர் அவருடைய வேண்டு கோளுக்கு இணங்க மதுரை மாநகர் சென்றார். அங்குச் சமணர்களோடு அனல்வாதம், புனல் வாதம் புரிந்து அவர்களை வென்றார். கூன் பாண்டியனது கூனைப் போக்கி, வெப்பு நோயையும் நீக்கினார். அன்று முதல் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் எனப்பட்டான். மயிலையில் பாம்பு கடித்து இறந்த பூம்பாவையை உயிர் பெற்று எழுமாறு செய்தார்.

இவர் பாடிய நமச்சிவாய பதிகம் கருங்கல் மனத்தையும் உருக வைக்கும் இயல்பினது.

**காத லாகிக் கசிந்துகண் ணீரமல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

என்று இறைவனின் ஐந்தெழுத்துப் பெருமையைப் போற்றுகிறார்.

Scanned by CamScanner

சம்பந்தர் நிலையாமையை வற்புறுத்திக் காட்டும் அழகு மிக இயல்பாக உள்ளது.

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்வேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்

இதுபோல எளிமையான நடையில் அரிய கருத்துக்களை விளக்கிக் காட்டுவதில் வல்லமை படைத்து விளங்குகிறார் சம்பந்தர்.

தமிழ்நாட்டில் பல தலங்களுக்கும் சென்று, இறைவன் புகழை நாளும் இன்னிசையால் பாடி, சைவம் தழைக்கச் செய்த திருஞான சம்பந்தர் தமது பதினாறாவது வயதில் மணக்கோலத்துடன் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

### திருநாவுக்கரசர்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்னும் ஊரில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகனாகத் தோன்றினார். இவரது இயற்பெயர் மருள்நீக்கியார். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்துவிட்ட இவர் தம் தமக்கையார் திலகவதியாரால் வளர்க்கப்பட்டார். இளம் பருவத்தில் இவர் சமண சமயத்தில் தருமசேனர் என்ற பெயரில் சேர்ந்திருந்தார். பின்னர் திலகவதியார் முயற்சியால் சைவம் தழுவினார். திருநாவுக்கரசர் என்ற அருட்பெயரையும் பெற்றார். திருநாவுக்கரசர் சைவராகிவிட்ட செய்தியை அறிந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அவரைச் சுண்ணாம்புக் கால்வாயில் இட்டும், நஞ்சு கலந்த உணவை உண்ண வைத்தும் கல்லில் கட்டிக் கடலில் வீசியும் துன்புறுத்தினான். இறைவன் அருளால் அக்கொடுமையிலிருந்து மீண்டதோடல்லாமல் கொடுமைகள் புரிந்த மகேந்திரவர்மனையே சைவனாக்கிவிட்டார் நாவுக்கரசர்.

எண்பத்தோர் ஆண்டுகள் உலகத்தில் வாழ்ந்து இறைப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்தார். திருஞான சம்பந்தரால் "அப்பர்" என்று அன்புடன் அழைக்கப்பட்டார். இவர் தம்முடைய பாடல்களில் 'தாண்டகம்' என்னும் பாவைக் கையாண்டு சிறக்கப் பாடியதால் "தாண்டக வேந்தர்" என்றும் அழைக்கப்பட்டார். இவர் பாடிய பதிகங்கள் 4900 இன்று கிடைத்திருப்பன 312 பதிகங்கள் மட்டுமே. இவருடைய பாடல்கள் பன்னிரு திருமுறையில் நான்கு, ஐந்து, ஆறாம்திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன.

Scanned by CamScanner

திருநாவுக்கரசர் சைவராகிவிட்டார் என்பதை அறிந்த மகேந்திர வர்மன் சினந்து அவரைத் தண்டிப்பதற்காக அழைத்துவரக் கட்டளை யிடுகிறான். தம்மை அழைத்துச் செல்ல வந்தவர்களிடம் திருநாவுக்கரசர் அஞ்சா நெஞ்சினராய், "யாம் யார்க்கும் குடியாக அடங்கி வாழ்வ தில்லை, எமனுக்கும் அஞ்சுவதில்லை, நரகத்தில் சென்று இடர்ப்படுவ தில்லை. பொய்ம்மை எம் வாழ்வில் இல்லை. மகிழ்ச்சியாக வாழ்வோம். நோய் அறியோம், எவர்க்கும் பணியமாட்டோம். எந்த நாளும் இன்பமேயன்றித் துன்பமில்லை" என்று முழங்குகிறார்.

**"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பமில்லை"**

என்று பாடும் பாடலில் அவருடைய பெருமித உணர்ச்சியையும் சிவபக்தியையும் உணரலாம். சிவபெருமானுக்குத் தம்மை அடிமை யாகவே ஆக்கிக் கொண்டு திருப்பணி செய்தவர் நாவுக்கரசர்.

திருநாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில் இட்டபொழுது அவர் அந்தக் கொடுமையிலும் இறைவனின் இனிமையையே காண்கிறார்.

**"மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நிழலே"**

சுண்ணாம்புக் காளவாயில் இறைவன் திருவடிகளைச் சிந்தனையில் நினைந்தமையின் வெம்மை தோன்றவில்லை குளிர்ச்சியே தோன்றிற்று.

**சுந்தரர்**

இவருக்கு நம்பியாரூரர், வன்தொண்டர், தம்பிரான் தோழர் என்ற வேறு பெயர்களும் உண்டு. இவர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூரில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் மகனாகப் பிறந்தார். அந்நாட்டு மன்னர் நரசிங்க முனையர் என்பவரால் மகன்மை கொண்டு (தத்து எடுக்கப்பட்டு) வளர்க்கப்பட்டார். அந்தணர் திருவும் அரசர் திருவும் ஒரு சேரப் பெற்று ஆயகலைகள் பலவும் பயின்று மணப்பருவம் எய்தினர். சடையனார், இவருக்குப் புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரியார் மகளைத் திருமணம் செய்ய எற்பாடு செய்தார். திருமண நாளன்று சிவபெருமான் ஒரு புதிய அந்தணர் வடிவில் வந்து, திருமணத்தை தடுத்து நிறுத்திச் சுந்தரரை ஆட்கொண்டார். பின்னர் சுந்தரர்,

Scanned by CamScanner

முற்பிறப்பில் இறைவன் தமக்கு இட்ட கட்டளைப்படி திருவாரூர் சென்று பரவையாரையும், திருவொற்றியூர் சென்று சங்கிலியாரையும் மணம் செய்து கொண்டார்.

சுந்தரர் பாடிய பாடல்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இவர் 3800 பதிகங்கள் பாடியதாகக் கூறுவர். ஆனால் கிடைத்திருப்பவை நூறு பதிகங்கள் மட்டுமே. இவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. இவர் பாடல்களில் நாடு, நகர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், அடியார் பலரின் வாழ்க்கைக் குறிப்புகளும், இயற்கை வருணனைகளும் மிகுதியாக இடம் பெறுகின்றன.

இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டபோது இவர் பாடிய பாடல் சுவையானதாகும்.

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருள்துறையுள்
அத்தா உனக்காளாய் இனி இல்லேன் எனலாமே."

இதுவே இவர் பாடிய முதற் பாடலாகும்.

மன்னர்களைப் பாடுவதை விடுத்து இறைவனைப் பாடவருமாறு புலவர்களைச் சுந்தரர் அழைக்கும் முறை சிறப்பாக உள்ளது. "புலவர் களே வீரம் சிறிதும் இல்லாத அரசனை வலிமையில் வீமன் என்றும் வில்லாற்றலில் விசயன் என்றும் கூறிப் புகழ்வதில் பயனில்லை. கொடுக்க மனம் இல்லாதவனைப் பாரி என்று புகழந்து கூறினாலும் கொடுப்பவரில்லை. இவர்களையெல்லாம் புகழ்ந்து பாடிக் காலத்தை வீணே கழிக்காதீர்கள். சிவபெருமானைப் பாடுங்கள். அவ்வாறு பாடினால் தேவருலகத்தையே ஆளும் பேற்றினைப் பெறலாம். இதில் எந்த ஒரு ஐயமும் இல்லை." இதனை,

"மிடுக்கி லாதானை வீமனே விறல்
விசயனே வில்லுக்கு இவனென்று
கொடுக்கி லாதானைப் பாரியே என்று
கூறினும் கொடுப்பார் இல்லை
பொடிக்கொள் மேனிஎம் புண்ணியன் புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேல்மர் உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்ற பாடலால் அறியலாம்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய ஏழு திருமுறைகளும் "தேவாரம்" எனப்படும். "தே + ஆரம்" எனப் பிரித்துப் பொருள் காண்பர். தே-கடவுள், ஆரம்-மாலை. தெய்வத்திற்குரிய பாமாலை என்ற பொருட்பட இப்பெயர் வந்ததாகக் கூறுவர். சிலர், தே வாரம் எனப் பிரித்துப் பொருள்காண்பர். வாரம் இசை, இறைவனை இசையோடு பாடும் பாடல்களாதலால் இவை தேவாரம் எனப்பட்டன என்பர்.

**மாணிக்க வாசகர்**

பாண்டிய நாட்டில் உள்ள திருவாதவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் மாணிக்கவாசகர். இவரது இயற்பெயர் திருவாதவூரர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராகப் பணி புரிந்தார். ஒரு முறை பாண்டியன் இவரிடம் நிறையப் பொன்னைக் கொடுத்துக் குதிரைகள் வாங்கி வருமாறு அனுப்பினான். செல்லும் வழியில் திருப்பெருந்துறையில் குருந்த-மரத்தடியில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று சிவ ஞானம் உபதேசிக்கப்பட்டார். இதனால் தாம் மேற்கொண்டு வந்த பணியை மறந்தார். கொணர்ந்த பொன்னைக் கொண்டு கோயில் கட்டுவித்து இறைப்பணியில் ஆழ்ந்தார். அதனால் சினமுற்ற பாண்டியன் இவரைச் சிறையிலிட்டான். இறைவன் இவர் பொருட்டு நரியைப் பரியாக்கியும் பரியை நரியாக்கியும் பிட்டுக்கு மண் சுமந்தும் சில திருவிளையாடல்களைப் புரிந்து இவரது பெருமையை அரசனும் மற்றோரும் அறியச் செய்தார். பின்னர் மாணிக்கவாசகர் கருங்கல் மனத்தையும் உருக வைக்கும் பாடல்களை இறைவன் மீது பாடினார். இறைவன் இவருடைய பாடல்களையெல்லாம் அந்தணர் வடிவத்தில் வந்து பாட்டோலையில் எழுதிக் கொண்டார் என்று கூறுவர்.

மாணிக்கவாசகர் பாடிய நூல்கள் திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். இவை எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப் பதிகம் ஈறாக 51 பகுதிகளைக் கொண்டது. 659 பாடல்களை உடையது. "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழி திருவாசகத்தின் பெருமையை உணர்த்தும். இந்நூலின் பக்தியினிமையில் மனம் பறிகொடுத்த இராமலிங்க அடிகள்

"வான்கலந்த மாணிக்க வாசகநின்திரு வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

Scanned by CamScanner

என்று உருக்கத்துடன் பாடியுள்ளார். இறைவன் தமக்குச் சிவபதம் அளித்த சிறப்பினை,

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே.

என்று மாணிக்கவாசகர் பக்திச்சுவை ததும்பப் பாடியுள்ளார்.

திருக்கோவையார், "கோவை" என்ற சிற்றிலக்கிய வகையில் தோன்றிய முதல் நூலாகும். இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் பாவித்து அகப்பொருள் துறைகள் அமைத்துப் பாடப் பெற்ற நூலாகும். "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்று இறைவனே கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்நூல் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது என்பர். இந்நூலில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன.

**திருமூலர்**

பன்னிரு திருமுறையில் பத்தாவது திருமுறையாகத் திகழும் சிறப்புடைய நூல் திருமந்திரம். இது ஒன்பது தந்திரங்களை உடையது. ஒவ்வொரு தந்திரமும் பல அதிகாரங்களைக் கொண்டது. இதில் மொத்தம் 3000 பாடல்கள் உள்ளன. இதனை இயற்றியவர் திருமூலர். நாயன்மார்கள் எல்லாரினும் காலத்தால் முற்பட்டவர் இவரே. இவர் ஒரு பெருஞ் சித்தர். நந்தி தேவரின் மாணவர். திருவாவடுதுறைக் கோயிலில் உள்ள அரசமரத்தடியில் மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்திருந்தார் என்றும். ஆண்டுக்கு ஒரு முறை விழித்து ஒவ்வொரு மந்திரமாக 3000 மந்திரங்கள் அருளினார் என்றும் கூறுவர்.

திருமந்திரமே முதல் மந்திர நூலாகும். இதுவே பிற்காலச் சைவ சிந்தாந்த சாத்திர நூல்களுக்கு வேராக விளங்குகிறது.

"அன்பும் சிவமும்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

Scanned by CamScanner

என்ற பாடல், அன்பே சிவம், சிவமே அன்பு, இரண்டும் ஒன்றே என்று கூறுகிறது.

**"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"**

**"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"**

**"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்"**

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"**

என்று திருமூலரால் கூறப்படும் உண்மைகள் அனைவரும் கடைப் பிடிப்பதற்குரிய அறிவுரைகளாகும்.

**காரைக்காலம்மையார்**

இவர் காரைக்கால் என்னும் ஊரில் பிறந்தமையால் இப்பெயர் பெற்றார். இவரது இயற்பெயர் புனிதவதியார். நாகப்பட்டினத்தில் வாழ்ந்த பரமதத்தன் என்பானை மணந்தார். ஒரு நாள் பரமதத்தன் கொடுத்துவிட்ட இரண்டு மாங்கனிகளுள் ஒன்றினைச் சிவனடியார்க்குப் படைத்துவிட்டார். பின்னர் வந்து உணவருந்திய கனவன் ஒரு கனியை உண்டுவிட்டு, மற்றொரு கனியையும் உண்ணக் கேட்டபோது, இறைவனை வேண்டி வேறொரு மாங்கனி பெற்றுத்தந்தார். இக்கனி முதலில் உண்டதைக் காட்டிலும் மிகுதியான சுவையுடையதாயிருத்தலை உணர்ந்த அவன் ஐயுற்றுக் கேட்டபோது உண்மையுரைத்தார் புனிதவதி யார். அவன் அதனைச் சோதிக்க வேண்டி இன்னொரு மாங்கனி வருவிக்குமாறு கூற, அதனையும் இறைவன் அருளால் வருவித்தார். இதுகண்ட பரமதத்தன் பேரச்சம் எய்தினான். தக்க சமயம் பார்த்து வாணிகத்தின் பொருட்டு வெளியூர் செல்பவன் போல இவரை விட்டுப் பிரிந்து சென்று மதுரையில் வேறு ஒருத்தியை மறுமணம் புரிந்து வாழ்ந்து வரலானான். இதனையறிந்த புனிதவதியார் தம் உற்றாருடன் கணவனைக் காணச் சென்றார். பரமதத்தன் தம் மனைவியுடன் இவரது காலடியில் வீழ்ந்து வணங்கினான். அது கண்டு பெருநாணமுற்ற புனித வதியார் சிவபெருமானை வேண்டிப் பேய் உருவம் பெற்றார். கயிலைமலை மீது தலையாலேயே நடந்து சென்று இறைவனால் "அம்மையே" என்றழைக்கும் பேறு பெற்றார்.

இவர் அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை, திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகிய நூல்களைப் பாடியுள்ளார். அவை பதினோராம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளன.

Scanned by CamScanner

அற்புதத் திருவந்தாதியில் உள்ள,

"அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்"

என்ற பாடல் சிவபெருமானுடைய சிறப்பினைக் கூறுகிறது.

**சைவ சித்தாந்த நூல்கள்**

மெய்கண்ட சாத்திரம் என்றும் அநுபூதி நூல்கள் என்றும் வழங்கப் பெறும் பதினான்கு நூல்கள் 12, 13, 14ஆம் நூற்றாண்டுகளில் தோன்றின.

1. **சிவஞான போதம்**

ஆசிரியர் மெய்கண்டார். சிவஞான போதம் சைவ சித்தாந்த நூல்களில் தலை சிறந்ததாகும். இது 12 சூத்திரங்களையும், 81 மேற்கோள் வெண்பாக்களையும் உடையது. சிவஞான போதம் கூறும் தத்துவக் கருத்து: புலன்களால் அறியப்படும் உலகப் பொருள்கள் அழியக்கூடியன. உயிர் அழியாதது. உயிர் உலகத்தை இயக்குவதில்லை. இரண்டையும் கடந்த ஒரு மேலான பொருள் உலகத்தையும் உலகப் பொருட்களையும் இயக்குகிறது. அதனைப் பரம்பொருள் என்கிறோம். அப்பரம்பொருள் அனைத்தையும் தமக்குள் ஒடுக்கி மீண்டும் தோற்றுவிக்கிறது. உயிர்களை அனாதி காலமாகப் பாசம் பந்தித்து வருகிறது. இந்தப் பாசத்தளையிலிருந்து உயிரை விடுவித்து இயல்பாக உள்ள மெய்ஞ்ஞானம் மீண்டும் அதனிடம் விளங்கப் பரம்பொருள் முத்தொழில் புரிகிறது. பாசத்தின் சேர்க்கையால் கட்டுண்ட ஆன்மா பரம்பொருளை அறிவதில்லை. அதனைப் பற்றுகின்ற பாசம் நீங்கும் பொருட்டுப் பரம்பொருளானது வினையைக் கூட்டுகிறது. 'வினை அனுப வித்துக் கழியவே பரம்பொருளே குருவாய்த் தோன்றிப் பசுஞானம் பாசஞானத்தைக் கழிக்கச் சிவஞானத்தை வழங்குகிறான். ஆன்மா சிவஞானம் பெற்று அனைத்தையும் பரம்பொருளின் செயலாகக் காண்கிறான். காணவே, பாசங்கள் விலகுகின்றன. திரு ஐந்தெழுத் தையும் திரு, வேடத்தையும், கோயிலையும் தன்னுடைய பாச நீக்கத்திற்குச் சாதனங்களாகக் கொள்கிறான். தொண்டர் குழாத்துள் தன்னை மறக்கிறான். வேடமும் ஆலயமும் பரம் பொருளாகவே கொண்டு வாழ்கிற சீவன் முக்தி நிலையின் முடிவில் ஆன்மா

பரம்பொருளோடு இரண்டறக் கலக்கிறான். இப்பரம்பொருளே சிவம்' என்பதாம்.

2. **சிவஞான சித்தியார்**

ஆசிரியர் அருள் நந்தி சிவாசாரியார். இந்நூல் 629 விருத்தப் பாக்களையுடையது. இவற்றில் பாதி தெரிந்தாலே ஞானம் பெறலாம் என்பர். 'சிவபெருமானைவிடத் தெய்வம் இல்லை; சிவஞான சித்திக்குமேல் சாத்திரம் இல்லை' என்பது பழமொழி.

3. **இருபா இருபது**

இதன் ஆசிரியரும் அருள் நந்தி சிவாசாரியாரே ஆவார். வெண்பா ஆசிரியப்பா மாறி மாறி வருகின்ற இருபது பாடல்களைக் கொண்டது. இச்சிறுநூல். இது வினாவும் விடையுமாகச் சாத்திர உண்மைகளை விளக்குகிறது.

4. **திருவுந்தியார்**

ஆசிரியர் திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்.

5. **திருக்களிற்றுப் படியார்**

ஆசிரியர் திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார்.

6. **உண்மை விளக்கம்**

ஆசிரியர் திருவதிகை மனவாசகங் கடந்தார் என்பவர். இவர் மெய்கண்டாரின் சீடர்களுள் ஒருவர். உண்மை விளக்கம் 36 தத்துவங்களை விளக்குகிறது.

7. **சிவப்பிரகாசம்**
8. **வினா வெண்பா**
9. **திருவருட்பயன்**
10. **போற்றிப் பஃறொடை**
11. **நெஞ்சு விடு தூது**
12. **கொடிக்கவி**
13. **உண்மை நெறி விளக்கம்**
14. **சங்கற்ப நிராகரணம்**

ஆகிய இறுதி எட்டு நூல்களின் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் ஆவார்.

Scanned by CamScanner

### சைவமடங்கள்

தமிழ் வளர்ச்சிக்குச் சைவ மடங்கள் ஆற்றும் தொண்டு அளவிடற்கரியது. தமிழ்ப் புலவர்களை ஆதரித்து ஊக்கம் கொடுத்து எண்ணற்ற நூல்கள் வெளிவர இம் மடங்கள் துணைபுரிகின்றன. மடாதிபதிகள் சிலரும் புலமை மிக்கவர்களாகச் சிறந்த நூல்களை இயற்றியுள்ளனர்.

### மதுரை மடம்

சைவ மடங்களில் காலத்தால் முற்பட்ட மடம் இதுவே. மதுரைக்குத் திருஞானசம்பந்தர் வந்தபோது இங்குத் தங்கியதாகக் கூறப்படுகிறது. இதனால் இம்மடத்தின் தொன்மையை அறியலாம். திருஞானசம்பந்தர் தங்கியதால் இம்மடத்திற்குத் திருஞானசம்பந்தர் திருமடம் என்ற பெயரும் உண்டு.

### திருவாவடுதுறை மடம்

இதனை 14ஆம் நூற்றாண்டில் நமச்சிவாய மூர்த்திகள் நிறுவினார். நன்னூலுக்கு மிகச் சிறந்த உரை வகுத்த சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், 'கலியுகக் கம்பன்' என்னும் புகழ் பெற்ற திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் ஆகியோர் இம்மடத்தின் ஆதரவில் தமிழ் வளர்த்தனர். 'ஐந்தெழுத்தால் ஒரு பாடையும் உண்டென அறையவும் நாணுவர் அறிவுடையோரே!' எனத் தமிழைத் தாழ்த்தித் தமது 'இலக்கணக் கொத்து' என்னும் நூலில் குறித்த ஈசான தேசிகர், வேலப்ப தேசிகர் ஆகியோரும் இம்மடத்தின் ஆதரவில் தமிழ் வளர்த்தோராவர்.

### தருமபுரம் மடம்

குருஞான சம்பந்த தேசிகர் இம்மடத்தை நிறுவினார். இவர் சொக்க நாத வெண்பா, சிவ போத சாரம், முத்தி நிச்சயம் முதலான நூல்களை இயற்றியுள்ளார். ஸ்ரீமாசிலாமணி தேசிகர், வெள்ளியம்பல வாணவர், கமலை ஞானப்பிரகாசர், படிக்காசுப் புலவர், தத்துவப் பிரகாசர், கந்தபுராணச் சுருக்கம் செய்த சம்பந்த சரணாலயர், வடுகநாத தேசிகர் ஆகியோர் இம்மடத்தைச் சார்ந்தவராவர்.

### திருப்பனந்தாள் காசி மடம்

குமர குருபரர் காசியில் அமைத்த குமாரசாமி மடத்தைச் சார்ந்த தில்லை நாயக சுவாமிகளால் திருப்பனந்தாள் காசி மடம் நிறுவப்பட்டது. தருமபுர மடத்தின் சிஷ்ய மடம் (சார்பு மடம்) என்று இது அழைக்கப்

Scanned by CamScanner

படுகிறது. இதன் கல்விப்பணி போற்றத் தக்கது. திருப்பனந்தாளில் ஒரு செந்தமிழ்க் கல்லூரியையும், ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கலைக்கல்லூரியை யும் இம்மடம் நடத்தி வருகிறது. பதிப்புத் துறையிலும் இம்மடம் சிறந்து விளங்குகிறது. சைவ சமய நூல்கள் பலவற்றைக் குறைந்த விலையில் வெளியிட்டுச் சமயத் தொண்டும் தமிழ்த்தொண்டும் புரிந்து வருகிறது. இதன்சார்பாக 'குமர குருபரர்' என்னும் திங்கள் இதழ் வெளிவருகிறது.

**பிறமடங்கள்**

குன்றக்குடி, காஞ்சிபுரம், பேரூர், மயிலம், திருப்பாதிரிப்புலியூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள மடங்களும் தளராது தமிழ்ப்பணி ஆற்றுகின்றன. வெறும் கோயில் நிர்வாகம் என்ற அளவில் நில்லாமல் தமிழ்ப்பணி, சமயப்பணி, சமுதாயப்பணி ஆகிய போற்றத்தக்க பணிகளை இம்மடங்கள் செய்து வருகின்றன.

இவ்வாறு பல்வேறு வழிகளில் சைவமும் தமிழும் தழைத்தோங் கலாயிற்று.

Scanned by CamScanner

# 16

# வைணவம் வளர்த்த தமிழ்

சைவ சமயத்திற்குச் சிவபெருமான் முழுமுதல் தெய்வமாக விளங்குவது போல் வைணவ சமயத்திற்குத் திருமால் முழுமுதல் கடவுளாகப் போற்றப்படுகின்றார். வைணவ சமயக் கொள்கைகளையும், பக்தி உணர்வையும் பரப்பும் பணியை முதன்மையாகக் கொண்ட ஆழ்வார்கள், ஆலயங்கள் பலவற்றிற்குச் சென்று பாடல்கள் பாடி இறைவனை வழிபட்டனர். இவ்வாறு பாடிய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். இவர்கள் பாடிய பாடல்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலாயிரம், பெரியதிருமொழி, இயற்பா, திருவாய்மொழி என நான்கு பகுப்புகளை உடையதாக அமைந்துள்ளது.

### முதலாழ்வார்கள் மூவர்

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் முதலாழ்வார்களாகக் கருதப்படுகின்றனர்.

### 1. பொய்கையாழ்வார்

பொய்கையில் இருந்து பிறந்தமையால் பொய்கையாழ்வார் எனப் பெயர் பெற்றார். காஞ்சிபுரத்தில் ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் பாஞ்சசந்நியம் எனும் சங்கின் அம்சமாகப் பிறந்தார் என்பர். இவர் முதல் திருவந்தாதியைப் பாடியவர்.

இறைவனுடைய உண்மை நிலை என்ன? அவனுடைய உருவம் என்ன? அவனுடைய பெயர் யாது? என்று கேட்பவர்களுக்கு இறைவனின் உண்மை நிலையை விளக்குகிறார். யார் யார் எந்த வடிவில் இறைவனைக் காண்கிறார்களோ அந்த வடிவில் இறைவன் இருக்கின்றான். எந்தப் பெயரால் அழைக்கிறார்களோ அதுவே அவனுக்குப் பெயர். அவரவர் சிந்தனைக்கேற்ப அவன் திகழ்பவன் எனக் கூறுவதை

Scanned by CamScanner

"தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்தது எப்பேர்மற் றப்பேர் - தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியான் ஆம்"

என்ற பாடலால் அறியலாம்.

திருக்கோவலூரில் ஓர் வீட்டின் இடைக்கழியில் மழைக்காலத்தே முதலாழ்வார்கள் மூவரும் கூடுகின்றனர். ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். மூவர் நிற்கலாம் எனக்கூறி மூவரும் நின்றபோது நான்காவதாக ஒருவர் அவர்களிடையே நெருக்கி நிற்கிறார். அவ்வாறு வந்து நின்றவர் திருமால் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் ஓர் வெண்பா இயற்றுகின்றனர்.

பொய்கையார் அப்போது பாடிய

"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று"

என்ற வெண்பா எப்பொழுதும் இன்பத்தைத் தருவதாகும்.

## 2. பூதத்தாழ்வார்

திருமாலைப் பூதம் எனப்பல இடங்களில் பாடியிருப்பதால் பூதத்தாழ்வார் எனப் பெயர் பெற்றார். திருகடல்மல்லை எனப்படும் மாமல்லபுரத்தில் ஐப்பசி அவிட்ட நட்சத்திரத்தில் கௌமோதகி என்னும் கதாயுதத்தின் அம்சமாகத் தோன்றியவர். இரண்டாம் திருவந்தாதி பாடிய்வர்.

சங்கப்புலவர்களைப்போல இயற்கையைத் தன்னுடைய பாடல்களில் இணைத்துப் பாடுகின்றார். ஆண் யானை ஒன்று இரண்டே கணுக்கள் கொண்ட இளம் மூங்கிலைப் பறித்து அதனைத் தேனிலே தோய்த்துப் பெண் யானைக்குத் தரும் அன்புக் காட்சியை அகவாழ்வின் மாட்சியை,

"பெருக மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில் வாங்கி - அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான் கலந்த வண்ணன் வரை"

Scanned by CamScanner

திருக்கோவலூரில் மூன்றாழ்வார்களும் சந்தித்த போது 'வையகம் தகளியா' என்னும் பாடலைப் பொய்கையாழ்வார் பாடினார். அச்சூழலில் பூதத்தாழ்வார் பாடிய,

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்"

என்ற பாடல் இசை நயமும் இறை உணர்வும் மிகுந்தது ஆகும்.

## 3. பேயாழ்வார்

திருமாலின்மீது கொண்ட பக்தியால் அழுது, சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தவர்போல விளங்கியதால் இப்பெயர் பெற்றார். மயிலாப்பூரில் ஐப்பசி சதய நட்சத்திரத்தில் நாந்தகம் எனும் வாளின் அம்சமாகப் பிறந்தவர். மூன்றாம் திருவந்தாதி பாடியவர்.

திருமாலின் கோலத்தைக் கண்டு களித்த பேயாழ்வார் அதனை

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரி சங்கம் கைக் கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று"

என்று பைந்தமிழில் பாடி மகிழ்வதைக் காணலாம்.

கண்ணன்மீது மிகுந்த பற்றுடைய பேயாழ்வார் சமரச எண்ணம் மிக்கவராகத் திகழ்கின்றார். திருமாலையும் சிவபெருமானையும் ஒரு சேரக் காண்பதை

"தாழ்சடையும் நீண் முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலை மேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"

என்ற பாடல் எடுத்துக்காட்டுகிறது.

முதலாழ்வார்கள் மூவரும் ஒரே காலத்தவர். திருக்கோவலூரில் திருமாலைக்கண்ட சிறப்புக்குரியவர்கள். இயற்கையை இறைவன் வடிவமாகக் கருதியவர்கள். இவர்களுடைய பாடல்களில் பிற சமய வெறுப்பினைக் காண இயலாது. இம்மூவரும் சமயப் பொதுமையை விரும்பும் அடியவர்களாகத் திகழ்ந்தார்கள்.

Scanned by CamScanner

## 4. திருமழிசையாழ்வார்

திருமழிசை எனும் ஊரில் பிறந்தவர். தை மக நட்சத்திரத்தில் சக்கரத்தின் அம்சமாகப் பிறந்தவர். நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் ஆகிய நூல்களைப் பாடியவர். சந்தப்பா பாடுவதில் சிறந்தவர் இவருடைய பாடல்களில் தத்துவக் கருத்துகள் மிகுதி.

திருமழிசையாழ்வாரை முதலாழ்வார்களைப் போலச் சமய நல்லிணக்கம் உடையவர் எனச் சொல்ல இயலாது. இவர் சமய வாதம் செய்து பிற சமயத்தினரை வென்றவர். தம்முடைய பாடல்களில் பிற சமயத்தினரைக் கண்டிப்பதை

**"அறியார் சமணர் அயத்தார் பௌத்தர்**
**சிறியார் சிவப் பட்டார்கள்"**

**"நிற்கின்ற தெல்லாம் நெடுமால் என்று ஓராதார்**
**கற்கின்ற தெல்லாம் கடை"**

என்ற பாடல்வரிகளின் மூலம் உணரலாம். காஞ்சிப் பல்லவன் இவருடைய சீடர் கணி கண்ணனை இகழ்ந்தபோது இவர் திருமாலையும் அழைத்துக் கொண்டு போன செய்தியை

**"கணிகண்ணன் போகின்றான் காமரு பூங் கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டா – துணிவுடைய**
**செந்நாப்புலவன் யான் செல்கின்றேன் நீயும் உன்றன்**
**பைந்நாகப் பாய்ச் சுருட்டிக் கொள்"**

என்ற பாடலால் அறியலாம். பின்னர் பல்லவன் தனது செயலுக்கு வருந்தி காஞ்சிக்கு மீண்டும் வர வேண்டும் என்றழைக்க ஆழ்வாருடனும் சீடனுடனும் திருமால் காஞ்சிக்குத் திரும்பியதால் "சொன்ன வண்ணம் செய்த பெருமாள்" என அழைக்கப்பட்டார்.

## 5. பெரியாழ்வார்

திருவில்லிப்புத்தூரில் பிறந்தவர். ஆனித் திங்கள் சுவாதி நட்சத்திரத்தில் கருடன் அம்சமாகத் தோன்றியவர். பட்டர்பிரான், விஷ்ணுசித்தன் எனும் சிறப்புப் பெயர்களை உடையவர். ஆண்டாளை வளர்த்தவர். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருவாய்மொழி ஆகிய நூல்களைப் பாடியவர். கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து இவர் பாடிய பாடல்கள் பிள்ளைத் தமிழ் எனும் தனியொரு இலக்கியம் உருவாகக் காரணமாக அமைந்தது. மதுரை மன்னன் வல்லபதேவனிடம் வைணவத்தின் சிறப்பை நிலைநாட்டிப் பொற்கிழி பெற்றவர்.

Scanned by CamScanner

பெரியாழ்வார் திருமொழியில் அமைந்த திருஅவதாரப் பாடல்கள் சுவையானவை. கண்ணனைத் தொட்டிலில் இடுகிறார்கள். தொட்டில் துணியால் ஆனது. கண்ணன் தூங்கவில்லை. அவனைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த யசோதை தன் தோழியிடம் இவனைத் தொட்டிலில் போட்டால் காலால் உதைத்துத் தொட்டிலைக் கிழித்துவிடுகின்றான். இடுப்பில் வைத்துக் கொண்டால் இடுப்பை முறித்து விடுகின்றான். மார்போடு அணைத்துக் கொண்டால் வயிற்றில் உதைக்கின்றான்என கண்ணன் செய்யும் குறும்புச் செயல்களைச் சொல்லி மகிழ்வதை,

"கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்
ஒடுக்கப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான் மெலிந் தென்றங் காய்"

என்ற பாடலின் மூலம் படித்து இன்புறலாம்.

## 6. ஆண்டாள்

பெரியாழ்வார் நந்தவனத்தில் ஆடித்திங்கள் பூச நட்சத்திரத்தில் தோன்றியவள். கோதை என்பது இயற்பெயர். ஆண்டவனையே ஆண்டவள் என்றமையால் ஆண்டாள் எனும் பெயர் பெற்றாள். சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்பது ஆண்டாளின் செயல் கருத்தமைந்த சிறப்புப் பெயர். அரங்கனைக் காதலனாக்கி இவர் பாடிய பாடல்கள் மிகச் சிறப்பானவை. பக்தியிலும் காதல் உணர்வை வெளிப்படுத்திய புரட்சி நோக்குடையவள். திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன இவருடைய நூல்கள்.

"வாரண மாயிரம் சூழ வலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி நான்"

என்ற பாடல் ஆண்டாளின் பக்திக்காதலை வெளிப்படுத்துகிறது.

நீராட்டப் புறப்பட்ட பெண்கள் இன்னும் எழுந்திராமல் சோம்பியிருக்கும் பெண்களுடன் உரையாடுவது போல ஆண்டாள் பாடிய,

"எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ?
சில்லென்று அழையேல்மின்! நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்

வல்லீர்கள் நீங்களே! நானே தான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ! போந்தார் போந்து எண்ணிக்கொள்!
வல்லானைக் கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்"

என்ற பாடல் நாடகச்சுவை கலந்த நற்றமிழ் விருந்தாகும்.

## 7. நம்மாழ்வார்

ஆழ்வார்களில் தலைமை சான்றவர், சைவ சமயத்தில் மாணிக்க வாசகருக்கு இணையாக, வைணவ சமயத்தில் இவரைப் போற்று வதுண்டு. திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். அரங்கப் பெருமானால் 'நம் சடகோபன்' என்றழைக்கப்பட்டமையாலும். எல்லோருக்கும் உரியவராக இருப்பதாலும் நம்மாழ்வார் என்ற பெயர் பெற்றார். சடகோபன், பராங்குசன், தமிழ்மாறன் முதலிய வேறுபெயர் களும் இவருக்கு உண்டு.

இவர் பாடிய திருவாய் மொழி 'திராவிட வேதம்' என்ற சிறப்பினைப் பெற்றது. இவருடைய நான்கு நூல்களும் வைண சமயத்தார்க்குரிய மறைகளாகப் போற்றப்படுகின்றன.

எல்லாப் பொருள்களையும் இறைவனாகக் காணும் ஆழ்ந்த உள்ளம் உடையவராக நம்மாழ்வார் விளங்குகிறார். 'உண்ணும் சோறும், பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமானே என்று எங்கும் எதிலும் கண்ணனைக் காணுகின்றார். இயற்கை அனைத்திலும் கண்ணனைக் காணும் தன்மைக்குச் சான்றாக',

"பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவி மலரென்றும் காண்தோறும் - பாவியேன்
மெல்லாவி மெய் மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரான் உருவே என்று"

என்ற பாடலைக் காட்டலாம்.

எல்லாவற்றிலும் இறைவனை நினைந்து உள்ளம் கசிந்து பாடும் இவருடைய பாடல்கள் உள்ளத்தை நெகிழச் செய்வன.

## 8. குலசேகர ஆழ்வார்

திருவஞ்சைக் களத்தில் மாசித் திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் மணி அம்சமாகப் பிறந்தவர். அரசாட்சியைத் துறந்து வைணவத் தொண்டரான



Scanned by CamScanner

வர். வடமொழிப் பயிற்சி மிகுந்தவர். இராமாவதாரத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். வேங்கடத்தில் படியாய்க் கிடந்து மகிழ விரும்பியவர். திருவரங்கத்தில் மூன்றாம் மதிலைக் கட்டியவர். தமிழில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்தமாலையும் இவரால் இயற்றப் பெற்றன.

திருமாலிடம் கொண்ட பக்தியால் அவர் எழுந்தருளிய திருத் தலத்தில் மீனாய்ப் பிறக்க விரும்புவதை,

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே."

என்ற பாடல் தெரிவிக்கின்றது. இறைவன் பக்தர்களைப் பலமுறை துன்பத்தில் வாடச் செய்கின்றான். என்றாலும் அடியவர்கள் அவனையே நினைத்து அவன் அருளை நாடுவதை நோயாளி, மருத்துவனோடு இயைபு படுத்தி உவமை கூறும்.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனது அருளே பார்ப்பன் அடியேனே"

என்ற பாடல் சிறப்பானது.

## 9. தொண்டரடிப்பொடி ஆழ்வார்

சோழநாட்டில் திருமண்டங்குடி எனும் ஊரில் மார்கழித் திங்கள் கேட்டை நட்சத்திரத்தில் வனமாலை அம்சமாய்த் தோன்றியவர். 'விப்ர நாராயணர்' என்பது இவரது இயற்பெயர். திருவரங்கத் திருமாலுக்கு அணிவித்து வழிபட பூந்தோட்டம் அமைத்துத் தொண்டாற்றியவர். திருப்பள்ளியெழுச்சி, திருமாலை என்பன இவர் பாடியவை.

"பச்சைமா மலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"

என்ற பாடல் அனைவரும் அறிந்ததே. இவருடைய பாடல்களில் துன்பத்தால் அழுது புலம்பும் நிலை மிகுதி.

இந்த அச்சுதனைவிட, தேவர்களின் தலைவனைவிட, தொண்டரடிப் பொடியாழ்வாருக்கு உறவினர் எனச் சொல்லிக் கொள்ள ஊரில் எவரும்

Scanned by CamScanner

இல்லை. உறவு எனச் சொல்லித் திருமாலின் பாதம் ஒன்றையே பற்றி நிற்பதை,

"ஊரிலேன் காணி இல்லை உறவுமற்று ஒருவர் இல்லை
பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன்
ஆருளர் களைகண் அம்மா! அரங்கமா நகரு ளானே"

என்ற பாடல் எடுத்துக்காட்டி ஆழ்வாரின் பக்தியுணர்வை வெளிப் படுத்துகிறது.

## 10. திருப்பாணாழ்வார்

உறையூரில் கார்த்திகைத் திங்கள் ரோகிணி நட்சத்திரத்தில் நெற் கழனியில் தோன்றியவர். பாணர் குலத்தவரால் வளர்க்கப்பட்டமை யால் இப்பெயர் பெற்றார். குலத்தைக் காரணம் காட்டி அரங்கனை வழிபடக்கூடாது என்ற தடைகளையெல்லாம் தகர்த்தவர். அரங்கன்மேல் பெண் ஒருத்தி காதல் கொண்ட தன்மையில் அமைந்த அமலானாதிபிரான் எனும் திருமொழி சொல்நயம் மிக்கது என்பதை

"ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான்
கோலமா மணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லாதோர் எழில்
நீலமேனி ஐயோ நிலைகொண்டது என் நெஞ்சினையே"

என்ற பாடலால் அறியலாம். அரங்கனைக் கண்ட விழிகள் வேறு எதையும் காணாது எனக் கூறுவதை

"அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதனைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"

என்ற பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றது.

## 11. திருமங்கை ஆழ்வார்

சோழநாட்டில் திருக்குறையலூரில் நள வருடம் கார்த்திகைத் திங்களில் வில்லின் அம்சமாய்த் தோன்றியவர். கள்ளர் மரபில் தோன்றிய வர். நீலி எனும் படைத்தலைவனின் மகனாகக் கருதப்படுவதால் 'நீலன்' என்றும், சோழ மன்னனின் தானைத் தலைவனாகத் திகழ்ந்து பகைவரை வென்றதால் 'பரகாலன்' என்றும், திருமங்கை நாட்டில் மன்னனாக விளங்கியதால், 'திருமங்கை மன்னன்' என்றும் அழைக்கப்படுபவர். பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திரு

Scanned by CamScanner

எழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன இவர் இயற்றிய நூல்கள்.

அகப்பொருள் நலமும், சித்திரக்கவி வளமும், சொல்லினிமையும் மிக்கன இவருடைய பாடல்கள்

"குலந்தருஞ் செல்வந் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தருஞ் செய்யும் நீள் விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயன செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்"

என்ற பாசுரம் நாளும் படித்து மகிழ வேண்டிய ஒன்று.

திருமங்கையாழ்வார் நாராயண மந்திர உபதேசம் பெற்றதும் 'வாடினேன் வாடி வருந்தினேன்' என்ற பாடலில் நாராயண மந்திரத்தைக் கண்டு கொண்ட ஆனந்தப் பெருக்கைப் பாடலாய்ப் பாடி மகிழ்வதை,

"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தருங் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும் பதம் திரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"

என்ற பாடல் எடுத்துக் காட்டுகிறது.

## 12. மதுரகவியாழ்வார்

இவர் நம்மாழ்வாரின் சீடர். திருக்குருகூரையடுத்த திருக்கோளூரில் ஈசுவர ஆண்டு சித்திரை நட்சத்திரத்தில் கருடாழ்வார் அம்சமாகத் தோன்றியவர். செவிக்கு இன்பம் தரக்கூடிய பாடல்களைப் பாடியதால் இப்பெயர் பெற்றார். இறைவன் திருமாலைப் பாடாது அவருடைய அடியவரான நம்மாழ்வாரைப் பாடியவர்.

"கண்ணி நுன் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பன் இல்

நண்ணித் தென் குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே"

என்று தொடங்கும் பதினொரு பாடல்கள் கொண்ட இனிமையான பிரபந்தம் இவரால் பாடப் பெற்றது.

### ஆழ்வார்கள் பதின்மரா? பன்னிருவரா?

திருமாலை முழுமுதற் கடவுளாகப் போற்றிய ஆழ்வார்கள் பன்னிருவர் என்பது பொதுவான கருத்து. சிலர் பதின்மர் என்ற கருத்தினை முன் வைக்கின்றனர். திருமாலைப் பாடாது அவரது அடியவரான நம்மாழ்வாரைப் பாடியதால் மதுரகவியாழ்வாரையும், பெண் என்பதால் ஆண்டாளையும் நீக்கி மற்ற பத்து ஆழ்வார்களை மட்டும் குறிப்பிட்டுப் பதின்மர் என்கின்றனர். இக்கருத்து நிலையானதாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்பது ஏற்புடைய கருத்தாகும்.

### பிற வைணவச் சான்றோர்

#### நாதமுனிகள்

ஆழ்வார்களின் பாசுரங்களைத் தொகுத்தளித்த பெருமைக்குரியவர். நம்மாழ்வாரின் திருவாய் மொழியினை அனைவரும் அறியும் நிலைமை உருவாக்கியவர். 'யோக ரகசியம்' 'நியாய தத்துவம்' எனும் இரண்டு நூல்களை இயற்றியுள்ளார்.

#### திருவரங்கத்தமுதனார்

கூரத்தாழ்வார் எனும் வைணவச் சான்றோரின் மாணவர் 'இராமனுஜ நூற்றந்தாதி' எனும் நூலைப் பாடியவர்.

#### ஸ்ரீவேதாந்த தேசிகர்

காஞ்சியில் பிறந்தவர். திருவேங்கடமுடையான் எனும் பெயருடையவர். தமிழ், வடமொழி இரண்டிலும் புலமை மிக்கவர். நவரத்தின மாலை, திருச்சின்ன மாலை, பிரபந்த சாரம், அர்த்த பஞ்சகம், மும்மணிக்கோவை, பள்ளித்திருநாமம், திருமந்திரச் சுருக்கு போன்றவை இவருடைய சில நூல்களாகும்.

### சைவமும் வைணவமும் ஏற்படுத்திய புதிய தமிழிலக்கியப் போக்கு

1. சைவ வைணவ சமயப்பரப்பல் போட்டிக்கிடையே தரமான பக்திப் பாடல்கள் கிடைத்தன.

Scanned by CamScanner

2. முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழ் தேவாரப் பாடல்களால் தனிச் சிறப்பைப் பெற்றது.

3. ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, பரிபாடல் என்ற பாவினங்களைக் கடந்து இசைநயம் மிக்க கலிப்பாவின் வகைகளையும், விருத்தப்பாக்களையும் கொண்டு பாடல்கள் தோன்றலாயின.

4. அகம், புறம், நீதி என்ற இலக்கியப் பாடுபொருள்களைக் கடந்து பக்தி இலக்கியம் எனும் புதிய நோக்கு ஏற்படலாயிற்று.

5. பின்னாளில் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்த பிள்ளைத் தமிழ், அந்தாதி, உலா போன்ற சிற்றிலக்கியங்களின் வளர்ச்சிக்குச் சைவ, வைணவ பக்திப் பாடல்கள் களங்களாக அமைந்தன.

6. பிறமொழிச் சொற்களை நாயன்மார்களும், ஆழ்வார்களும், பயன்படுத்தியதன் மூலம் தமிழில் சொற்கோவை பெருகியது.

7. தமிழில் சைவ, வைணவத் தத்துவக் கருத்துக்கள் வளர்ச்சி பெற்றமைக்கும், நிலைபெற்றமைக்கும் இவர்களுடைய படைப்புகள் காரணமாக அமைந்தன.

8. தமிழில் வழிபாடு சிறப்புற்றதற்கும் அதன்வழி தமிழ் மேலோங்கி வளர்ந்ததற்கும் பக்திப்பாடல்கள் வழிவகுத்தன.

9. வைணவ சமயப் பாடல்கள் தமிழின் பெருமைக்கும், ஓசைக்கும் புதிய எழுச்சியைக் கொடுத்தன.

10. தமிழ் இலக்கியவரலாற்றில் பக்தி இயக்க காலத்தில் இலக்கியங்கள் தோன்றிய அளவு வேறு காலங்களில் தோன்றி மணம் பரப்பவில்லை எனலாம்.

Scanned by CamScanner